மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) கோயம்புத்தூர், சிங்காநல்லூர், உட்பட 13 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்க வகை செய்வதற்கான நெல்லித்துறை நீர்வழங்கு திட்டத்திற்காக உலக வங்கிக் குழுவினருடன் விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு நீர்வழங்கு—கழிவுநீர் அகற்று வாரியம் திட்டத்தைக் கூர்ந்த ஆய்வுக்காக அனுப்ப வேண்டுமென்று உலக வங்கிக் குழு கோரியது. நீர்பகிர்வு முறையின் போதுமானம், திட்டத்திற்கான நிதியுதவி, திட்டத்தின் பொருளாதார ஊற்றம் போன்ற இத்திட்டத்தின் சில கூறுகளைப் பற்றிய விவரங்களை உலக வங்கிக் குழு கேட்டது. உலக வங்கிக் குழுவினரால் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் திட்டத்தை வகுத்த பிறகு, இந்திய அரசின் மூலமாக இத்திட்டம் உலக வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(இ) இது குறித்து திட்டவட்டமான பொறுப்பு எதையும் உலக வங்கிக் குழுவினர் மேற்கொள்ளவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: உதவித் தலைவர் அவர்களே, இத்திட்டம் குறித்து 1972-ம் ஆண்டுக்குள்ளாக ஒரு முடிவுக்கு வந்து, கோயம்புத்தூர், சிங்காநல்லூர், பல்லடம் போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்காகத்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தந்தப் பேரூராட்சி மன்றங்கள் நிதி திரட்டிக்கொடுக்கின்ற சக்தி எவ்வளவு படைத்திருக்கின்றன என்பதையெல்லாம் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். இதுகுறித்து உலக வங்கியினிடமும் தொடர்பு கொண்டிருக்கிறோம். உலக வங்கி இதற்கான சரியான பதிலையோ அல்லது திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அளவிலோ கூறிவிடுமானால், பிறகு எல்.ஐ.சி. மூலம் கடன் பெற நாம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

* 117 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி குடிநீர்த்திட்டத்திற்கு வேண்டிய மின்சாரப் பம்புசெட்டு எந்த கம்பெனியில் வாங்கப்பட்டது?

(இ) அதற்கு உத்திரவாதம் ஏதும் அளிக்கப்பட்டிருக்கிறதா?

1972 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) வந்தவாசி குடிநீர் வழங்கு திட்டத்திற்கான மின்சார விசையேற்றங்கள், சென்னை-1-ல் உள்ள, ஈசன் எஞ்சினீயரிங் கம்பெனியிடமிருந்து வாங்கப்பட்டன.

(இ) அந்த இயந்திரங்கள் இயங்கத் தொடங்கிய நாள் தொடங்கி, அதாவது 1970-ஜனவரியிலிருந்து ஓராண்டுக் காலத்தில் இயந்திரம் செயல்படுவதில் குறைபாடு எதுவும் நேர்ந்தால் நேர் செய்து தருவதாக அந்தக் கம்பெனியால் உத்தரவாதம் அளிக்கப் பட்டது.

திரு. கே. எ. வகாப் : உதவித் தலைவர் அவர்களே, அங்கே இரண்டு இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒன்று எப்பொழுதும் பழுதடைந்த நிலையிலேயே இருக்கிறது. அந்தக் கம்பெனிக்காரர்கள் வந்து ரிபேர் செய்துகூட, சரியான நிலைக்கு வரவில்லை. ஆகவே, பழுதடைந்திருக்கும் ஒரு இயந்திரத்தை மீண்டும் மாற்றியமைத்துக் கொடுக்கும்படி அரசு அவர்களைக் கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பழுது பார்க்கப்பட்ட இரண்டாவது பம்ப் செட்டு கம்பெனியாரால் பழுதுபார்க்கப்பட்ட பிறகு, அது சீர்கேடு எதுவும் இல்லாமல் நடந்துகொண்டிருப்பதாகத் தான் அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. மறுபடியும் சீர்கேடாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார் களானால், அதுபற்றி உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

* 118 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மணப்பாறை நகரத்திற்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இந்தப் பொருள் அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மணப்பாறைக்கு காவிரியி லிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கான ஒரு திட்டம் இருந்ததே, அதில் எந்தத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.